[25th January 1961

SRI A. VEDARATHNAM: மேஜை மீது வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் கண்டிருக்கிற பாலங்களின் விவரங்களைச் தாலூகாவாரியாக சொல்ல முடியுமா? திருத்துறைப்பூண்டி தாலூகாவில் மூன்று என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அவைகள் எவை என்று அறிவிக்க முடியுமா? இன்னும் போடவிருக்கின்ற பாலங்களைப்பற்றியும் கூற முடியுமா?

THE HON. SRI P. KAKKAN: இன்னும் தஞ்சாவூர், பாபநாசம், ஒரத்தநாடு முதலிய தாலூகாக்களில் 80,000 ரூபாய் அளவுக்கு வேலை நடந்து வருகின்றது. அவைகள் மார்ச் மாதத்தில் முடியும். இன்னும் 4 பாலங்கள் கட்ட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இரண்டாவது வருஷத்தில் முடிக்க திட்டமிட்டிருக்கிறது. இன்னும் 13 பாலங்களையும் 10 கல்வெர்ட்டுகளையும் கட்ட அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அவைகளும் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் டெக்னிக்கல் ஸாங்ஷன் ஆகவில்லை.

அந்த நான்கு பாலங்கள்—

	Estimated cost in lakhs. RS.
1 Construoting a bridge across Adapar at M. 19/4 of Velanganni-Vedaranyam road.	6.90
2 Reconstruoting the bridge across Ammanar at M. 6/1 of Tranquebar-Mayuram road.	0·90
3 Constructing a bridge across Arasalar at M. 4/2 of Tiruneelakudi-Kanalangudi road.	2·49
4 Construction of bridge across Kaduvyar at M. 4/4 of Sikkli-Palakurichi road.	1·00

SRI R. SRINIVASA IYER: பட்டுக்கோட்டை தாலூகாவிலே ராஜா மடத்திற்கு அருகிலே ஒரு பாலம் கட்டுவதாக ஏற்கெனவே ஒரு திட்டம் இருந்தது. அது இப்போது என்ன நிலையில் இருக்கிறது? அதேபோல் கிழக்கு கடற்கரை ஓரத்திலுள்ள அம்பாசமுத்திரத்திலே உள்ள அம்புலி ஆற்றிற்கு அருகிலும் ஒரு பாலம் போடுவதாக இருந்தது. அதுவும் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் பதிலளிப்பதற்கு வசதியாக இருக்கும்.

State Bank and Taluk Treasuries

* 170 *Q.*—**SRI M. K. SOMASUNDARAM** (on behalf of Sri N. R. Thiagarajan): கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்டேட் பாங்கும், தாலூகா டிரஷரியும் வெவ்வேறு இடங்களில் இருப்பதால் பொதுமக்களுக்கு அசௌகரியமிருப்பதை சர்க்கார் அறியுமா?

(இ) இரண்டையும் ஒரே இடத்தில் வைக்க உத்தரவிடுவார்களா?

25th January 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) & ( ) The Government are aware of the inconvenience caused to the public as a result of the sub-treasury and the State Bank branch conducting the cash transactions of the sub-treasury, being located at different places but there are pratical difficulties in locating both institutions in the same premises. The present inconvenience is not of such a magnitude as to warrant any expensive change-over. Treasury and Sub-treasury have also been specially instructed to see that urgent bills and bills presented by legislators are sent to the bank in time for the payment to be made by the banks during the same day.

SRI M. K. SOMASUNDARAM : ஸார், அநேகமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸ்டேட் பாங்கும், தாலுகா டிரஷரியும் தனியாக வெகு தூரத்திலே இருப்பதால், ஒரு பில்லை மாற்றுவதற்கு மூன்று நாட்களுக்கு மேலாகிறது. ஆகவே கூடிய சிக்கிரத்தில் மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக அரசாங்கம் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. இனிமேல் இந்த காலதாமதம் அதிகமாக இருக்காது என்று நம்புகிறேன்.

Indian students (Foreign Universities)

*** 171 Q.—SRI A. VEDARATHNAM :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1959-60-ல் நம் மாநிலத்திலிருந்து வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு எத்தனை மாணவர்கள் எந்தெந்தப் பயிற்சிகள் பெறச் சென்றனர்?

(இ) இவர்களுக்கு நம் அரசாங்கம் புரிந்த உதவி என்ன?

(உ) இந்த ஆண்டில் எத்தனை மாணவர்கள் எந்தெந்த துறைகளில் பட்டம் பெற்றுத் திரும்பியிருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No student was sent by the Government for further studies in Universities in foreign countries during the period.

(இ) & (உ) : Do not arise.

SRI A. VEDARATHNAM : தனியார்கள் அனுப்புவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்து வெளிநாடுகளுக்கு மாணவர்களை அனுப்புகின்றதா? அப்படி தனியார் மாணவர்கள் எத்தனை பேர் இப்போது வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படி மாணவர்கள் மேல் நாடுகளுக்குச் செல்வதற்கு இந்த அரசாங்கத்தினுடைய அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை.